21-10-1993

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 6 இதழ் 247
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 22 10 1993

## அநுராவை மீண்டும் கட்சியில் சேர்க்க சிறிமாவோ விருப்பம்!

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து நீக்கப்பட்ட திரு. அநுர பண்டாரநாயக்காவை மீண்டும் கட்சிக்குள் சேர்த்துக் கொள்வதற்கு தாம் தயாராக உள்ளதாக கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார். தமது கட்சியின் நிலை குறித்து திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேலும் தெரிவித்துள்ளதாவது:

(4ம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் 6 வேங்கைகள் வீரச்சாவு

(மூதூர்)

மூதூரில் பொன்னுங்கரணி என்ற வழியாக விடுதலைப் புலிகள் சென்றுகொண்டிருந்த போது படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நால்வர் வீரச்சாவடைந்தனர்.

2-ம் லெப் ரஜீவன் (கிருஷ்

(4-ம் பக்கம் பார்க்க)

# அரசின் தவறான கொள்கையால் வடபகுதி நிலைமைகள் பாதிப்பு!

## நாடாளுமன்றில் எதிர்க்கட்சி எம். பி. சாடல்!!

(கொழும்பு)

அரசாங்கம் கடைப்பிடித்துவரும் தவறான கொள்கைகள் காரணமாகவே வடபகுதி நிலைமைகள் தொடர்ந்தும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன. அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அங்கே அதிகரித்துவருகின்றன. மூன்று வருடங்களாகியும் இன்னும் வடபகுதிக்கு அரசாங்கத்தால் மின்சாரத்தை வழங்கமுடியாதுள்ளது.

எதிர்க்கட்சி எம் பி ஒருவர் நேற்று நாடாளுமன்றத்தில் பேசிய போது இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் அவசரகால சட்டத்தை மேலும் நீடிப்பது தொடர்பான விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

விவாதத்தில் தொடர்ந்து பேசிய அந்த எம். பி. மேலும் தெரிவித்ததாவது:

வடபகுதிக்கு பொருள்களைகிளி நொச்சியினூடாக கொண்டுசெல்வதற்கே இரசாணுவத்தினர் அனுமதிப்பத்திரங்களை வழங்குகின்றனர். அப்படியானால் இராணுவத்தினர் எதற்காக கிளாலிமீது தாக்குதல் ஒன்றை நடாத்தினர்?

யாழ்ப்பாணத்தில் நாளுக்கு நாள் பொருட்களின் விலைகள் அதிகரிக்கின்றன. அரசு கடைப்பிடிக்கும் தவறான கொள்கை காரணமாகவே இந்த விலை அதிகரிப்பு ஏற்பட காரணமாக உள்ளது.

கடந்த மூன்று வருடங்களாக வடபகுதிக்கு மின்சாரம் இல்லை. இதனால் அந்தப் பகுதி இருளில் மூழ்கியுள்ளது. யாழ்ப்பாணத்திற்கு மின்சாரத்தை விநியோகிக்க அரசாங்கம் ஒரு இயலாத நிலையில் உள்ளதா?

வடபகுதியில் இருப்பவர்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ் வரும் உணவுப் பொருள்களில் முறைகேடு

(கொழும்பு)

கொழும்பிலிருந்து அனுப்பப்படும் உணவுப்பொருள்களில் பெரும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பால்மா பொருட்களின் பேக்களையும் பைகளையும் கிழித்து படையினர் அனுப்புவதால் அவை பழுதடையும் அபாயம் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. —க-இ

## சென்னா ரெட்டியின் கெடுபிடி அதிகரிப்பு

(சென்னை)

தமிழ்நாடு ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டியின் கெடுபிடியினால் ராஜ்பவனில் வேலை செய்துவரும் பல ஊழியர்கள் தமது பதவியை ராஜினாமாச் செய்ய முடிவு செய்துள்ளனர்.

அமைச்சர் கண்ணப்பன் நேற்று பத்திரிகையாளரிடம் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் கண்ணப்பன் தமிழக ஆளுநர் பற்றி தெரிவிக்கையில்,—

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் தட்டெழுத்தாளர் பதவி: தகுதியானோருக்கு இதுவரை நியமனம் வழங்கப்படவில்லை

(கொழும்பு)

பரீட்சை திணைக்களத்தினால் நடந்த இரு வருடங்களுக்கு முன் நடாத்தப்பட்ட தமிழ் தட்டெழுத்தாளர் தகுதிகாண் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு இதுவரை நியமனங்கள் வழங்கப்படாதது பற்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாடு பூராவிலுமுள்ள அரச திணைக்களங்களில் ஐம்பதுக்கும் மேற்பட்ட தமிழ் தட்டெழுத்தாளர்களின் வெற்றிடங்கள் கடந்தபல வருடங்களாக நிரப்பப்படாமல் இரு

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆயுதக்கும்பலால் கொழும்பில் கடத்தப்படும் தமிழர் காணாமல் போகின்றனர்

(கொழும்பு)

கொழும்பு நகரில் பெருமளவு தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தரித்தோரால் கடத்தப்படுவதும் பின் அவர்கள் காணாமல் போகும் சம்பவங்களும் இப்போது வெகுவாக அதிகரிப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் ஆயுதம் தாங்கிய இளைஞர்களால் ஒரே இரவில் மூன்று இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். கொழும்பு எவ்வேட் வீதியில் ஒருவரும், பம்பலப்பிட்டியில் இருவருமே கடத்திச் செல்லப்

(4-ம் பக்கம் பார்க்க)

## அரச சேவை நியமனங்களில் இன விகிதாசார முறை ரத்து

(கொழும்பு)

அரசாங்கசேவை, மாகாண சேவை மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கான சேவை ஆகியவற்றிற்கு ஊழியர்களை நியமிக்கும்போதும், பதவி உயர்வுகள் வழங்கும்போதும் இனி மேல் இனவிகிதாசார முறை கடைப்பிடிக்கப்படமாட்டாது. அந்த முறை விரைவில் ரத்தாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் இதற்கான கொள்கைத் தீர்மானங்களை எடுத்துள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

## யுத்தத்துக்கான தீர்வே இன்றைய அவசர தேவை - அமைச்சர் தேவராஜ்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு யுத்தத்துக்கு உடனடி தீர்வு காண்பதே இன்றைய அவசர தேவையாகும்.

இந்துசமய விவகார அமைச்சர் பி.பி. தேவராஜ் இவ்வாறு கூறினார்.

அவசரகால சட்டத்தை மேலும் நீடிப்பது தொடர்பாக நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் பேசியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

சுதந்திரக்கட்சி உறுப்பினர் திரு. ஜினதாச நியதிபால உரையாற்றுகையில், வடக்கு கிழக்குப் பகுதியில் யுத்தத்

(4-ம்பக்கம் பார்க்க)

## இனப்பிரச்னைக்கு இராணுவ- அரசியல் தீர்வுகளே தேவை!

(கொழும்பு)

இனப் பிரச்னைக்கு இராணுவ மற்றும் அரசியல் தீர்வு இரண்டுமே தேவையாகுமென எதிர்க்கட்சி தரப்பில் உரையாற்றிய அநுரத்த ரத்வத்தை தெரிவித்தார்.

(4ம் பக்கம் பார்க்க)

தாயே!
நின் மகவை எழுப்பு
நெற்றியிலே.... திலகம் இடு
போ என்று சொல்லி
போர்க்களத்துக்கு அனுப்பிவை.

## வரி விளம்பரம்

### துளிர்

தமிழ்நாடு புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் மாணவர்களுக்கு அதிக பயன் தரக் கூடியது. கிடைக்குமிடம்: வசந்தம் புத்தக நிலையம், 405, அருச்சுனா வீதி, புதிய பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (இ-534)

### ஆண்டு 4 பரீட்சை

ஆண்டு 4 மாணவர்களுக்கு (புலமைப்பரிசில் 1994) மாதிரித் தொடர்பரீட்சை 13வது 23-10-93 நாளை சனி மு. ப. 11-00 பி. ப. 1-30நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும். விளுத்தாள்களையும் பெற்றுக்கொள்ளலாம் புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (இ-531)

### அக்டோபர் வியாழ, சனி, செவ்வாய் மாற்றங்கள்

பாடசாலைப் புத்தகங்கள், உபகரணங்கள், இந்திய, இலங்கை சஞ்சிகைகள், தினசரிகள், கலைமகள், வியாழன் சனி மாற்றங்கள் விற்பனையாகின்றன. யாழ் புத்தகசாலை, (ஸ்ரான்லி வீதி), புதிய பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (சி-532)

### "வீட்டுத்தோட்ட போட்டி"

போட்டியில் வெற்றி சட்டசி "சக்தி" இயற்கைப் பசளை. கூட்டெரு முறையில் தயாரிக்கது மண்வளம் பெருக்கி விளைச்சலை அதிகரிக்கிறது. பக்கெற் ஒன்று விலை ரூ 9/- 25 பக்கெற் கொண்ட பெட்டி ஒன்று ரூபா 200/- மட்டுமே. அன்ரூ கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. "மிக்கலைந்" (சி-3154)

## நவராத்திரி விழா

(பண்டத்தரிப்பு)
சுதுமலை அருள்மிகு புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நவராத்திரிவிழா கடந்த சனிக்கிழமையன்று ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.
24ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று விஜயதசமி, மானம்பூ உற்சவங்கள் நடைபெறவுள்ளன. —62

0 0

(கொழும்புத்துறை)
கொழும்புத்துறை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நண்பகல் சரஸ்வதி பூசை விசேட அபிடேகம், பூசை ஆராதனை வழிபாடுடன் நடைபெற்று வருகிறது. தினமும் சரஸ்வதி தோத்திரம் பாடப்பட்டு வருகிறது. (154)

0 0

(பண்டத்தரிப்பு)
மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை தொடக்கம் நவராத்திரி விழா கல்லூரியில் அமைந்துள்ள முருகன் ஆலயத்தில் நடைபெற்று வருகிறது.
எதிர்வரும் 24-ம் திகதி விஜயதசமி நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. (82)

0 0

(கொழும்புத்துறை)
கொழும்புத்துறை சடையம்பித்தறை அருள்மிகு ஸ்ரீவிசாகப் பெருமான் முருகன் ஆலயத்தில் நவராத்திரி விழா மாலை இடம்பெற்றுவருகிறது. —154

0 0

(பண்டத்தரிப்பு
வலி - தென் - மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் தலைமை அலுவலகத்தில் வாணி விழா எதிர்வரும் 24-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளது. 72)

0 0

(கொழும்புத்துறை)
யாழ். மாநகராட்சி மன்ற ஊழியர்களின் ஆதரவில் அருள்மிகு ஸ்ரீ ஆதிவைரவர் ஆலயத்தில் நவராத்திரி விழா காலை விசேட அபிடேகம், பூசை வழிபாடுகள் தினமும் நடைபெற்று வருகின்றன. (154)

0 0

(கொழும்புத்துறை)
கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் இன்று 22-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8-00 மணிக்கு வாணி விழா நடைபெறும். —154

(யாழ்ப்பாணம்)
யாழ். செயலக நலன்புரிச் சங்கத்தினரால் நடாத்தப்படும் கலைமகள் விழா இன்று 22-ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1-15 மணிக்கு நடைபெறும் —162

0 0 0

(அரியாலை)
யாழ். பிரதான வீதியிலுள்ள யாழ். மாவட்ட விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவு சமாசத்தினால் இன்று 22-ந் திகதி வெள்ளிக்கிழமை பகல் 11-00 மணிக்கு நவராத்திரி பூசை நடைபெறவுள்ளது. (59)

0 0

(அரியாலை)
யாழ். சரப்புறுதி கூட்டுத்தாபன வெளிக்கள உத்தியோகஸ்தரின் நவராத்திரி விழா விக்டோறியா வீதியிலுள்ள சங்கமண்டபத்தில் இன்று நடைபெறுகின்றது. (59)

0 6

(யாழ்ப்பாணம்)
கட்டுக்கோட்டை கலை நிலையத்தில் (மாவடிச் சந்தி) கலைமகள் விழாவும் முப்பத்திரெண்டாம் ஆண்டுப்புத்தூக்க நிகழ்வுகளும் நாளை 23-ம் தேதி சனிக்கிழமை நடைபெறும்.

0 0

(யாழ்ப்பாணம்
மக்கள் வங்கி யாழ்ப்பாணப் பிரதேசத் தலைமை ஊழியர் நலன்புரிச் சங்க வாணி விழா இன்று வெள்ளிக்கிழமை 22-ம் தேதி பிற்பகல் 3-00 மணிக்கு பிரதேசத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும்.

(யாழ்ப்பாணம்)
மீசாலை மிதிலை கலாமன்றத்தினர் தமது கலாமன்றத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை வாணிவிழாவைக் கொண்டாடுகின்றனர். இதில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன. —இ

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை - மானிப்பாய் 1994ஆம் ஆண்டு சந்தைகளுக்கான
# கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பின்வரும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 1994ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் திகதி தொடக்கம் டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்குக் கொடுப்பதற்கான கேள்விகள் 1993-11-09 ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்களை பிரதேசசபையின் உப அலுவலகங்களில், இதன் கீழ் உள்ள அட்டவணையில் தெரிவிக்கப்பட்டவாறு கேள்வி வைப்புப் பணத்தையும், மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர பணத்தையும் செலுத்துவதன் மூலம் 1993-11-08 ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்களை இணைப்பிரதிகளில் தயாரித்து, மூலப்பிரதியை "விசேட ஆணையாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்" என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை "உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் எழுதப்பட்டு, அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் 1993-11-09 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது குறித்த நேரத்திற்கு முன் வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் தலைமைப் பணியகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 1993-11-09 ஆம் திகதி பி. ப. 2-00 மணிக்குத் தலைமை அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும். அத்தருணம் கேள்விகாரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ சமுகமளிக்கலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் தம்முடன் அடையாள அட்டையும் தவறாது கொண்டுவருதல் வேண்டும்.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களையும், நிபந்தனைகளையும் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும், உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விசேட ஆணையாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
தலைமைச் செயலகம்,
நகரமண்டபம், மானிப்பாய்.
1993-10-19.

### அட்டவணை

| உப அலுவலகம் | குத்தகையின் தன்மை | கடையின் மாத வாடகை | கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | நிர்ணயிக்கப் பட்ட தொகை |
|---|---|---|---|---|---|
| மானிப்பாய் பட்டினம்: | | | | | |
| 1. ஆட்டிறைச்சிக் கடை (சந்தை) | | 250/- | 500/- | 100/- | 25,000/- |
| 2. மாட்டிறைச்சிக் கடை இல. 1 (சந்தை) | | 250/- | 500/- | 100/- | 50,000/- |
| 3. மாட்டிறைச்சிக் கடை இல. 2 (சந்தை) | | 250/- | 500/- | 100/- | 50,000/- |
| 4. மானிப்பாய் மத்திய சந்தை | | | 500/- | 100/- | 66,000/- |
| 5. கட்டுடைச் சந்தை | | | 300/- | 100/- | 500/- |
| மானிப்பாய் கிராமம்: | | | | | |
| 1. சாவற்கட்டு சந்தை ஆனைக்கோட்டை | | | 500/- | 100/- | 6,000/- |
| 2. பிரசாத் சந்தை நவாலி | | | 500/- | 100/- | 12,000/- |
| 3. சாக்கைதீவுச் சந்தை ஆனைக்கோட்டை | | | 500/- | 100/- | 5,000/- |
| 4. மாட்டிறைச்சிக் கடை (பிரசாத் சந்தை | | 100/- | 500/- | 100/- | 42,000/- |
| 5. ஆட்டிறைச்சிக் கடை (பிரசாத் சந்தை) | | 100/- | 500/- | 100/- | 10,000/- |
| 6. ஆட்டிறைச்சிக் கடை (சாவற்கட்டு சந்தை) | | 250/- | 500/- | 100/- | 10,000/- |
| பண்டத்தரிப்பு கிராமம்: | | | | | |
| 1. மாகியப்பிட்டி சந்தை | | | 300/- | 100/- | 11,000/- |
| 2. மாகியப்பிட்டி மாட்டிறைச்சிக் கடை | | 100/- | 500/- | 100/- | 13,800/- |
| 3. மாகியப்பிட்டி ஆட்டிறைச்சிக் கடை | | 100/- | 500/- | 100/- | 10,500/- |

(ஏ-3512)


நல்லின பலாக்கன்று முற்றிலும்

## முற்றிலும் இலவசம்

5 ஜாம் போத்தல்களை எமது நிறுவனத்தில் ஒப்படைத்து அதற்குரிய பணம் ரூபா 25/- பெற்றுக் கொள்வதுடன் நல்லின பலாக்கன்றை முற்றிலும் இலவசமாக எடுத்துச் செல்லுங்கள்.

## ரேஸ்ட் லேன் இண்டஸ்ரீஸ் [தனி] லிமிட்டட்

14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(எ-3517

## மாதாந்தம் 40 பரிசில்களை நீங்கள் வென்றிட ஒரு சந்தர்ப்பம்

(அ) நீங்கள் செய்ய வேண்டியது
உங்களிடமுள்ள பின்வரும் போத்தல்களில் ஏதாவது (5) ஐந்தை, கீழே குறிப்பிட்ட இடங்களில் ஒப்படைத்து அவற்றிற்குரிய பணத்தைப் பெறுவதுடன் வெற்றுப் போத்தல் சீட்டிழுப்புக்கான டிக்கட்டை இலவசமாகவும் பெற்றுக்கொள்ளுங்கள்.
(ஆ) போட்டிக்கான போத்தல்கள்
1 ஜாம்/புறூட்டினேக்ஸ் 2 பியர் 3. கோடியல்
(இ) போத்தல்கள் ஒப்படைக்கும் இடங்கள்
1. ரேஸ்ட் லேன் இண்டஸ்றீஸ், 14, சீனியர் லேன், யாழ்ப்பாணம்.
2. அறிவகம், சாவகச்சேரி.
3. சுபாஸ் பேக்கவுஸ், நெல்லியடி.
4. பேரம்பலம் மருந்துக்கடை, கன்னாகம்.
5. சித்தி விநாயகர் நூல் நிலையம், ஏழாலை மேற்கு.
6. சபாரிஸ், சுண்டுக்குளி.
7. ஸ்கந்தா மாஸ்ரர் சங்கரத்தை சந்தி.
8. இ. இராஜதுரை, பத்திரிகை விற்பனை நிலையம், இருபாலை.
9 லிங்கம் கூல்பார், மானிப்பாய்.
10. கந்தசாமி அன் சன்ஸ் சங்கானை.
11. மாருதி ஸ்ரோர்ஸ், K. K. S. வீதி, வல்வெட்டித்துறை.
12. வி. சுந்தரலிங்கம், ரஜனி பீடா ஸ்ரோர்ஸ், இமையாணன், உடுப்பிட்டி.
13. செல்வராசா ஸ்ரோர்ஸ், முதலாம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.
14. செ. சுரேஸ், சோமசுந்தரப் புலவர் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.
(ஈ) மாதாந்த சீட்டிழுப்பு ஒவ்வொரு மாதமும் 5-ம் திகதி நடைபெறும்.

## ரேஸ்ட் லேன் இண்டஸ்றீஸ் (தனி) லிமிட்டட்,

14, சீனியர் லேன், யாழ்ப்பாணம்.
(ஏ-3518)

மணிவாக்கு

அறிவால் பண்படுத்தப்பட்ட ஆர்வமே உறுதி.

— ப்ளேய்ஸ் பேஸ்கல்

# நமது நோக்கு

## புதைக்கவா? எரிக்கவா?

"புதைக்கவா? எரிக்கவா?" - இது ஒரு மனித உரிமை மீறல் பிரச்சினை அல்ல. எனவே, வசதி யானபடி செய்யுங்கள்; ஆனால் உடனடியாகச் செய்யுங்கள், குப்பை கூளங்களுக்கான இறுதிக் கிரியைகளை!

மழைக்கால நற்சிந்தனை பற்றித்தான் நமது கவனம் செல்கின்றது!

நுளம்புத் தொல்லை, குடிநீர் பழுதடைதல், சுகாதாரக் கேட்டால் தொற்றுநோய் பரவுதல் போன்றவற்றால், ஏற்கனவே பலவகையாலும் துன்பங்கள் அனுபவித்து வரும் மக்கள், மேலும் துயரம் கொள்ளலாமா?

பன்மடங்கு விழுந்தவனை மாடேறி உழக்கவிடலாமா?

குழை செப்புகளை வெட்டி விதிவோரங்களில் போடுவோரும், குப்பை கூளங்களைக் குவித்துவைத்திருப்போரும், பொதுக் கிணறுகள், பொது மலசல கூடங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவோரும் சுகாதாரம்பற்றி மேலும் தெளிவுபெற வேண்டும்.

காய்ந்து போகாத குப்பைகளை வெட்டிப் புதைப்பதால், வளவுகளுக்குள் இருக்கும் பயனுள்ள மரங்களுக்கு நல்ல பசளை கிடைக்கும்.

காய்ந்து போனவற்றை எரித்துவிடுவதால், பொட்டாஸ் உரம் கிடைக்கும்; நிலைகொள்ள விரும்பும் நுளம்பு, பூச்சி புழுக்கள் போன்றவை, புகையின் தொல்லையால் அலைக்கப்பட்டு அழிந்தே போவார்கள்; எஞ்சியோர் இடம்பெயர்ந்து போவார்கள்!

காரணங்களுக்கெல்லாம் காரணம் ஆராயும் காலமிது. நுளம்பு பெருகுதல், தொற்றுநோய்க் கிருமிகள் பரவுதல் போன்ற வசிப்புகளுக்கான காரணம் என்ன?

பொது இடங்கள், வீதி ஓரங்கள், நீரோடும் கால்வாய்கள், பொதுக்கிணறுகள் ஆகியனவற்றில் காணப்படும் 'கண்ணுவிக்' காட்சிகளுக்கு யார் பொறுப்பு?

"வரி கொடுக்கிறோம்: எனவே இது நிர்வாகிகள் வேலை!" என்ற அரசியற் பொருளாதாரச் சிந்தனையால், தமது பொறுப்புக்களை மறந்துவிடுகிறார்கள் இலர்.

கண்ணுக்குத் தெரியாத உயிரினங்களையே அழிக்கக் கூடாது என்ற சமண முனிவர்களின் போதனையில் ஈடுபாடுள்ள காரணத்தினாலோ, என்னவோ, தீயன அழித்துச் சுத்தம் பேணும் பணிக்குச் சிலர் முன்வருவதில்லை.

"சும்மா இருப்பதே சுகம்!" என்ற வேதாந்தம் சுகாதாரமான சூழலை உருவாக்க உதவாது. எனவே சுத்தம் சுகம் தரும் என்ற சிந்தனை, நுளம்பைவிட வேகமாகப் பரவும் என நம்புகிறோம்!

# 870 கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணம் வழங்கப்படும்

## யாழ். செஞ்சிலுவை சங்கம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்ட வன்செயல் காரணமாக இடம்பெயர்ந்து யாழ். செஞ்சிலுவை சங்கத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட குடிசைகளில் தங்கியிருக்கும் கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது.

நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் நிதிஉதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ள இத்திட்டத்தில் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு சூடைவலை, முப்புரி வலை மற்றும் கம்பசகம், பிளை, மிதவை முதலிய கடற்றொழில் உபகரணங்கள் கழற்சி முறைக் கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது

சூடைவலையும், உபகரணங்களும் வடமராட்சி கிழக்கு, மருதங்கேணிப் பிரிவிலுள்ள செம்பியன்பற்று, நாகர்கோவில் முகாம்களில் உள்ளோருக்கும், முப்புரி வலை பருத்தித்துறை, சாவகச்சேரி, தெல்லிப்பழை, உடுவில், நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை முகாம்களில் தங்கியிருப்போருக்கும் வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் வடமராட்சி கிழக்கு செம்பியன் பற்று, நாகர்கோவில் பகுதியில் அமைந்துள்ள குடிசைகளில் தங்கியிருக்கும் 331 கடற்றொழிலாளர் குடும்பங்களும் பருத்தித்துறைப் பிரிவிலுள்ள முகாம்களில் தங்கியிருக்கும் 26 குடும்பங்களும், தெல்லிப்பழைப் பிரிவு முகாம்களில் தங்கியிருக்கும் 15 குடும்பங்களும், சாவகச்சேரிப் பிரிவு முகாம்களில் தங்கியிருக்கும் 236 குடும்பங்களும், நல்லூர்ப்பிரிவு முகாம்களில் தங்கியிருக்கும் 16 குடும்பங்களும் உடுவிற் பிரிவு முகாமில் தங்கியிருக்கும் 46 குடும்பங்களும், சங்கானைப் பிரிவு முகாமில் தங்கியிருக்கும் 156 குடும்பங்களும் சண்டிலிப்பாய்ப் பிரிவு முகாம்களில் தங்கியிருக்கும் 44 குடும்பங்களுமாக மொத்தம் 870 குடும்பங்கள் நன்மை பெறவுள்ளன

மேற்கூறப்பட்ட அமைவிடங்களிலிருந்தும் மொத்தம் 870 பயன் பெறுனர் இத்திட்டத்தின் மூலம் தம் தொழில் முயற்சிகளை மீண்டும் தொடரக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதைவிட இடம் பெயர்ந்த மேலும் 800 குடும்பங்கள் தூண்டித் தொழில் செய்வதற்குரிய உபகரணங்களை பெற்றுக் கொள்வர்.

இத்திட்டத்தின் கீழ் சூடைவலையும், உபகரணங்களும் பெறும் திட்டப் பயன் பெறுனர் ஒருவரிடமிருந்து தொடர்ச்சியாக 27 மாதங்களுக்கு நாள் ஒன்றுக்கு 10/- ரூபாவும், முப்புரி வலை பெறும் திட்டப் பயன்பெறுனர் ஒருவரிடமிருந்து தொடர்ச்சியாக 5 மாதங்களுக்கு நாள் ஒன்றுக்கு 10/- ரூபாவும் மீளளிப்புப் பணமாகப் பெற்றுக் கொள்ளப்படும் (க)

## வெள்ளைப் பிரம்பு தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ் லயன்ஸ் கழகமும் யாழ் விழிப்புலனற்றோர் சங்கமும் இணைந்து நடாத்தும் வெள்ளைப் பிரம்பு தினம் நாளை 23-ம் திகதி காலை 9-00 மணிக்கு யாழ் பரியோவான் கல்லூரியில் நடைபெறவுள்ளது

இவ்விழாவில் அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாருதி ஜெயராஜ் சிறப்புரை வழங்குகின்றார்.

யாழ். லயன்ஸ் கழகத்தலைவர் லயன் இ ஈஸ்வரகுமாரன் தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நிதியாளர் திரு. க. கனகரத்தினம் கலந்து கொள்வர்.

## பொதுஎழுதுநர் சேவை போட்டிப் பரீட்சையை இங்கு நடத்த கோரிக்கை

(மானிப்பாய்)

அரசாங்க மாகாண அரசாங்க சேவையின் பொது எழுதுநர் சேவையின் இரண்டாம் வகுப்பில் "அ" பிரிவிற்கு உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு ஒழுங்கு செய்து தருமாறு அரசாங்க எழுதுவினைஞர் சங்க யாழ். கிளையின் செயலாளர் யாழ். கச்சேரிப் பணிப்பாளருக்கு மகஜரொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இம் மகஜரில் மேற்படி பரீட்சை கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது என்றும் எதிர்வரும் நவம்பர் மாதம் 20-ம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கும் இப்பரீட்சைக்கு கிளாலி ஊடாகப் பயணத்தை மேற்கொள்ளவேண்டியுள்ளது. இப்பயணத்தின்போது முன்னர் பல அரசாங்க உத்தியோகத்தர்களும், பொதுமக்களும் உயிர் இழந்துள்ளார்கள்; மேலும் கிளாலி ஊடாகப் பயணம் செய்யும் பவர் பாதுகாப்பும் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கொழும்பு சென்று பரீட்சை எழுத முடியாத நிலை ஏற்பட்டுள்ளது இதனால் தமிழ் அரச உத்தியோகத்தரின் பதவியுயர்வு சம்பள உயர்வு என்பன மறுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அம்மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. -71

## இன்று

(அளவாலை)

உரும்பிராய் பரவதபத்தினி அம்பாள் ஆலயத்தில் நவராத்திரி விழாவையொட்டி வருடந்தோறும் நடைபெறும் சைவசமயப் போட்டிப் பரீட்சைக்கான பரிசளிப்பு விழா இன்று 22ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணிக்கு நடைபெறவுள்ளது. (59)

0 0 0

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடாத்திவரும் வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3-00 மணியளவில் "முருகனிடம் போவோம்" என்ற தலைப்பில் பண்டிதர் சைவப் புலவர் கைலைநாத சிவாச்சாரியார் குருக்கள் சொற்பொழிவாற்றுகிறார். அறிமுக உரையை க. சரவணமுத்து நிகழ்த்துகிறார். (ம)

0 0 0

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்து அகதி முகாமில் தங்கியிருக்கும் மீனவர்களுக்கான வலை, மற்றும் உபகரணங்கள் வழங்கும் கடற்றொழில் திட்டம் வடமராட்சி மருதங்கேணிப் பிரிவில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது. (க)

0 0 0

(கொழும்புத்துறை)

யாழ். ரோட்டரக்ட் கழகத்தால் நடாத்தப்படும் மாதாந்த சொற்பொழிவு இன்று 22ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (154)

0 0 0

(பண்டத்தரிப்பு)

உரும்பராய் கிழக்கு சர்வசக்தி சனசமூக நிலைய பகுதியில் இன்று 22ம் திகதி வெள்ளிக்கிழமை யன்று தொழுநோய் ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது. -72

## இராசிபலன்

22-10-1993

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி 6)

ஸப்தமி காலை 7-25 வரை, உத்தராடம் பி. இ. 4-30 வரை, சித்தயோகம், இராகு காலம் காலை 10 32 முதல் 12-02 வரை, சுபநேரம் காலை 6-02 முதல் 7-32 வரை.

மேஷம்: தொழில் கௌரவம், பணவரவு, நண்பர் உதவி.

இடபம்: வழித் தொல்லை, குடும்ப வேற்றுமை, உடல் அசதி.

மிதுனம்: பிறர் தொல்லை, நாழிகை ராறு, அச்சம்.

கடகம்: விருந்தோம்பல், களைப்பு, மனைவி பெருமை.

சிம்மம்: வாக்கு வன்மை. பிரச்சினைக்கு தீர்வு, காரிய சித்தி.

கன்னி: பதட்டம், துயரமான சம்பவம், யோசனை

துலாம்: வெளிவேஷம், கருத்துமுரண்பாடு, தப்பபிப்பிராயம்.

விருச்சிகம்: கடித உறவு, கைவலி. பயண நன்மை.

தனுசு: சகோதர பிணக்கு, காரிய தாமதம், வெறுப்பு.

மகரம்: சுபகாரியம், உறவினர் வருகை, பெரியோர் ஆசி.

கும்பம்: மேலதிகாரிகள் துன்பம், அகாலபோஜனம், மதிப்பு குறைதல்.

மீனம்: எண்ணியது ஏமாற்றம். அறிஞர் சந்திப்பு, குடும்பசுகம்.

— ஜோஸ்யர்.

## இலவச பண்ணிசை வகுப்பு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தர்மகர்த்தா சபையினரால் விஜயதசமி நாளான 24-ம் திகதி காலை 9 மணிக்கு யாழ். வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இலவச பண்ணிசை வகுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது. இதில் பங்குபற்ற விரும்புவோர் பாடசாலை அதிபருடன் தொடர்பு கொண்டு தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகின்றது.

உலகத்தில் சிறந்த தொழில் உயிர்காக்கும் விவசாயம்


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ் கிளைத் தலைமையகம்

## பதவி வெற்றிடங்கள்

1. தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்து ஆசிரியர்

தமிழில் விசேட சித்தியும், ஆங்கிலம், கணிதம் உட்பட க. பொ. த (சா) வில் ஆறு பாடங்களில் சித்தியும், தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பெற்ற சான்றிதழுடன், மேற்படி கற்பித்தலில் அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

2. தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்தாளர்

தமிழில் விசேட சித்தியும், ஆங்கிலம், கணிதம் என்பவற்றில் சாதாரண சித்தியும் உள்ளடங்கியதாக க. பொ. த. (சா) வில் ஆறு பாடங்களில் சித்தியும் மேற்படி விடயத்தில் அனுபவமும், தகைமையும் பெற்றிருத்தல் வேண்டும்.

3. ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்தாளர்

ஆங்கிலத்தில் விசேட சித்தியும், தமிழ், கணிதம் என்பவற்றில் சாதாரண சித்தியும் உள்ளடங்கியதாக க. பொ. த (சா) வில் ஆறு பாடங்களில் சித்தியும் மேற்படி விடயத்தில் அனுபவமும், தகைமையும் பெற்றிருத்தல் வேண்டும்.

4. கணக்குப் பதிவாளர்/காசாளர்

ஆங்கிலம், தமிழ், கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் க. பொ. த. (சா) வில் ஆறு பாடங்களிலும், க. பொ. த. (உ) வில் கணக்கியலிலும் சித்தியடைந்திருப்பதுடன், கணக்குப் பதிவில், தமிழ், ஆங்கில தட்டச்சு என்பவற்றில் தகைமையும், அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் சுயமாக தயாரித்து 28-10-93 ற்கு முன்னதாக செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளைத் தலைமையகத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

மேற்படி விண்ணப்பதாரர்களுக்கான செய்முறைப் பரீட்சை 30-10-93 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கிளைத் தலைமையகத்தில் நடைபெறும். (பரீட்சார்த்திகள் தமது தட்டச்சு இயந்திரங்களைக் கொண்டு வருதல் வேண்டும்)

கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
21-10-93

(எ 3521)

# மினிபஸ் விபத்தில் வயோதிபர் பலி

(திருநெல்வேலி)

நேற்றுப் பிற்பகல் பலாலி வீதி திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையத்தடியில் ஏற்பட்ட மினிபஸ் விபத்தில் வயோதிபர் ஒருவர் மரணமானார்.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது; பலாலி வீதியில் இரு மினிபஸ்கள் எதிராக வந்தன. சைக்கிளில் வந்த வயோதிபர் மீது ஒரு பஸ் மோதியதால் அவர் படுகாயமுற்ற நிலையில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு பின் மரணமடைந்தார்.

மரணமானவர் புளியங்கூடலைச் சேர்ந்த எஸ் கந்தையா (வயது 67 எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த விபத்துப் பற்றி காவல் துறையினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது -157-இ

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையின் இந்து மாணவர் மன்றத்தினால் அப்பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட 'சகலகலாவல்லி மாலை' மனன இசைப் போட்டியின் பரிசளிப்புவிழா இன்று காலை 9 மணிக்கு வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும்.

வாணிவிழாத் தொடர்பான இப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை இதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளும் உடற்பயிற்சி ஆசான் ஏ. தம்பித்துரை வழங்குவார்.-இ

## சென்னாரெட்டியின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாக்டர் சென்னாரெட்டி. இதற்கு முன்பு ராஜஸ்தானில் ஆளுநராக இருந்தபோதும், இதேபோன்ற பாணியில் தான் அங்கும் நடந்துகொண்டார். அதுமட்டுமல்ல டாக்டர் பீகார் வாழ்க்கை ஒன்றையும் அவர் அங்கு நடாத்தினார்.

தமிழ் நாட்டிலும் ராஜ்பவனில், கடந்த 30 வருடங்களுக்கு மேலாக வேலைசெய்து வரும் ஊழியர்களை ஆளுநர் தகாத வார்த்தைகளால் பேசுவதுடன் சில சமயங்களில் அவர்களை தாக்கியும் உள்ளார். இதனால் பல ஊழியர்கள் தமது பதவியை ராஜினாமாச் செய்ய முடிவு செய்துள்ளனர்.

டாக்டர் சென்னாரெட்டி ஆளுநராகச் செல்லும் மாநிலங்களில், முதலமைச்சர்களைக் காட்டிலும் தானே சகல அதிகாரங்களையும் கொண்டவர், என்ற நினைப்பில் செயல்படுபவர். இதனால், அம் மாநிலங்களில் ஆட்சியில் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்துவிட்டது இதனால் ஆட்சியை உடன் கலைத்துவிடும்படி மத்திய அரசுக்கு சிபார்சு செய்வதிலும் வல்லவர் என்றும் அமைச்சர் கூறினார். (வி-இ)

# புறூண்டி அரசு கவிழ்ப்பு

(லண்டன்)

புறூண்டி அரசை நேற்று முன்தினம் அதிகாலை ராணுவம் கைப்பற்றியது.

மத்திய ஆபிரிக்காவில் உள்ள புறூண்டி நாட்டின் ஜனநாயக அரசை இராணுவம் சதிப்புரட்சிமூலம் கைப்பற்றியதுடன் ஜனாதிபதியையும் சிறைப்பிடித்துள்ளது.

ஜனாதிபதியின் மனைவியும், பிள்ளைகளும் புறூண்டியில் உள்ள பிரான்ஸ் தூதரகத்தில் தஞ்சம் புகுந்துள்ளதாகவும் தெரியவருகிறது. -வி

# யாழ். வந்த பத்திரிகையாளர்க்கு தமிழ் மக்கள் கஷ்டங்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். வந்துள்ள சிங்களப் பத்திரிகையாளர்கள் குழு நேற்றுப் பிற்பகல் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போலை அவரது செயலகப் பணிமனையில் சந்தித்தது.

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்து வாழும் மக்களின் குறைபாடுகள், அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு மாணவர்களின் கல்வி பாதிப்பு, விவசாயிகள் தமது விவசாயச் செய்கையில் ஈடுபடுவதற்கு வேண்டிய கிருமி நாசினி, உரம், மண்ணெண்ணெ போன்ற முக்கிய பொருட்களின் தட்டுப்பாடு, குழந்தைகளின் போஷாக்கின்மைநிலை குறித்து இந்தக் குழுவினர்க்கு எடுத்துக் கூறப்பட்டதாகத் தெரிய வருகிறது. (162-இ)

# வவுனியாவில் புதிய விவசாயக் கல்லூரி

(கொழும்பு)

''வவுனியாவில் அடுத்த வருடம் மார்ச் மாதம், புதிதாக விவசாயக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இக் கல்லூரியில் விவசாயக் கல்வி போதிக்கப்பட்டு டிப்ளோமா சான்றிதழும் வழங்கப்படும். இக் கல்லூரி மூலம், வடபகுதி விவசாயிகள் பெரிதும் நன்மைபெறுவார்கள்''

இவ்வாறு விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சித்துறை அமைச்சர் ஆர். எம். தர்மதாஸ பண்டா கூறியுள்ளார். அமைச்சர் இதுபற்றி மேலும் கூறுகையில்;

வடக்கிலும் - கிழக்கிலும் தற்போது விவசாய அபிவிருத்திகள் இராணுவ நடவடிக்கைகளினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதி விவசாயிகளின் கஷ்டங்களை நாம் நன்கு உணர்கின்றோம். இப்பகுதிகளில் நடைபெறும் யுத்தம் விரைவில் முடிவடையவேண்டும் என்பதையே நான் விரும்புகின்றேன் வடக்கு—கிழக்கு விவசாயிகளை நாம் ஒருபோதும் கைவிடமாட்டோம் என்றார். —வி-இ

## பதவி நியமனப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

சிறு பணி செய்பவர்களை பொது எழுதுனர் தரம் II 'ஆ' பிரிவுக்கும், தட்டெழுத்தாளர் சேவையின் வகுப்பு II 'ஆ' பிரிவுக்கும் நியமிப்பதற்கான பரீட்சை இன்று 22-ந் திகதியும், நாளை 23-ந் திகதியும் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நடைபெறும். இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை இதுவரை சேகரித்துக்கொள்ளாதவர்கள் பரீட்சை நிலையத்தில் சேகரித்துக் கொள்ளலாம் என்று யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். —இ

## தமிழ் தட்டெழுத்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ந்து வருகிறது.

இதுசம்பந்தமாக தான் உடன் நடவடிக்கை எடுத்து, மேற்படி வெற்றிடங்களை விரைவில் நிரப்புவதற்கு ஆவன செய்வதாக பிரதமர் தெரிவித்துள்ளார் என அண்மைய செய்திகள் தெரிவிக்கின்றன. (வி இ)

# கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவர்கள் பகிஷ்கரிப்பை கைவிட்டனர்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரியர் மாணவர்கள் தாம் மேற்கொண்ட பகிஷ்கரிப்பைக் கைவிட்டு நேற்று முன்தினம் பிற்பகல் முதல் தமது விரிவுரைகளுக்குச் சமுகம் கொடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கலாசாலை நிர்வாகத்துடன் இரண்டாம் ஆண்டு ஆசிரிய மாணவர்களின் ஒத்திவைக்கப்பட்ட பரீட்சை தொடர்பாக ஏற்பட்ட பேச்சுவார்த்தை பயனளிக்காததையடுத்து இவர்கள் தங்கள் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வந்தது தெரிந்ததே.

இந்த விவகாரம் பேச்சுவார்த்தை மூலம் சமரசமாகத் தீர்க்கப்பட்டதையடுத்து மேற்படி மாணவர்கள் தமது பகிஷ்கரிப்பைக் கைவிட்டதாகக் கூறப்படுகிறது. —162-இ

## இனப்பிரச்னைக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற அவசரகால நீடிப்பு சம்பந்தமான பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் அத்தாவுட செனிவிரத்தின உரையாற்றுகையில் இனப்பிரச்னைக்கு சுமுகமான தீர்வைப் படாவிட்டால் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வது தவிர வேறுவழியில்லை என தெரிவித்தார். —ஈ-இ

## ஆசிரியர் இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தொலைக் கல்வி ஆசிரியர் பயிற்சி நெறி இறுதிப் பரீட்சை ஒக்டோபர் 23, 24ம் திகதிகளிலும், நவம்பர் 6ம், 7ம் திகதிகளிலும் யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நடைபெறும் இப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளைத் தங்கள் பயிற்சி நிலையத்தில் (யாழ் இந்துக் கல்லூரியில்) சேகரிக்கும் வண்ணம் பரீட்சார்த்திகளுக்கு யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். —இ

## அரசின் தவறான

1ம் பக்கத் தொடர்ச்சி]

எமது நாட்டைச் சேர்ந்தவர்களே இதனால் தான் அந்த மக்களின் கஷ்டங்களைப் பற்றி நான் மிகுந்த கவலையுடனும் அக்கறையுடனும் இங்கு எடுத்து இயம்புகின்றேன்.

வடபகுதிக்கு பொருட்களை அனுப்புவதற்கு இராணுவம் வழங்கும் அனுமதிப் பத்திர முறையில் பலவிதமான முறைகேடுகள் நடக்கின்றன.

கிளாலிவரை சென்ற ராணுவம் அங்கிருந்து மீண்டும் ஆனையிறவு திரும்பியதுபற்றி பலவகையான கருத்துக்கள், தெரிவிக்கப்பட்டபோதும் படையினர் அப்போது எடுத்த முடிவு சரியானதே. ஏனெனில் கிளாலியில் படையினரால் தொடர்ந்தும் நிலைத்து நின்றிருக்கமுடியாது அதன் காரணமாகவே அவர்கள் அங்கிருந்து ஆனையிறவு திரும்பினர். இதில் குறைகூற இடமில்லையென்றார். —இ

# கூவம் விவகாரம்: மற்றுமொரு கதிரியக்க பேழை மீட்பு

(சென்னை)

சென்னை கூவம் ஆற்றில் எறியப்பட்ட கதிரியக்கப் பேழைகளில் மற்றொரு பேழையும் எடுக்கப்பட்டதாக அணு சக்தி கட்டுப்பாட்டு வாரியத் தலைவர் டாக்டர் கே. கோபால கிருஷ்ணன் தெரிவித்தார்.

அவர் மேலும் இதுபற்றி தெரிவிக்கையில்,—

நேற்று எடுக்கப்பட்ட கதிரியக்கப் பேழையில் கசிவு எதுவும் ஏற்படாமல் நல்ல நிலையிலேயே இருந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமையும் ஒரு கதிரியக்கப்பேழை கூவம் ஆற்றில் கண்டெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. மூன்று கதிரியக்கப் பேழைகள் கூவம் ஆற்றில் எறியப்பட்டது தெரிந்ததே. —ச

## யுத்தத்துக்கான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தில் ஈடுபட்டுவரும் படையினருக்கு சகல விதமான உதவிகளையும் செய்து அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்றார். —வி இ

## அநுராவை

(1-ம் பக்கம் பார்க்க)

எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா கொலை செய்யப்பட்ட பின்னரும்கூட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அழிந்துபோகவில்லை.

ஒரு கட்சி அதன் கொள்கைகள் மாத்திரமே நிலைத்து நிற்கிறது. தனி ஒரு நபரின் செல்வாக்கின்மூலம் எந்த ஒரு கட்சியும் நிலைத்து நிற்பதில்லை.

நான் சந்திரிகா குமாரணதுங்கா மீது அதிகளவு ஈடுபாடு கொண்டுள்ளதாக அநுரா தெரிவித்துள்ள குற்றச்சாட்டு உண்மைக்கு முரணானது.

அரசியலைப் பொறுத்தவரையில் இவர்கள் என் சொந்தப் பிள்ளைகள் என வாதிட முடியாது கட்சிதான் எனக்கு முக்கியம். கட்சியை நான் பாதுகாக்க வேண்டும். பிள்ளைகள் தவறு செய்தால் அதை நான் மறைக்கமுடியாது. அநுரா எவ்வளவோ தவறுகளைச் செய்தார் அதன் படியே அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும் அவரை மீண்டும் கட்சியில் சேர்த்துக்கொள்ள நான் தயாராகவே உள்ளேன் என்றார். (இ)

## ஆயுதக் கும்பலால்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளார்.

தொண்டர் நிறுவனம் ஒன்றில் கடமையாற்றும் ஒரு ஊழியரும் இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை வெள்ளைநிற வானில் வந்த ஆறு துப்பாக்கி நபர்களே இவ்வாறு தமிழ் இளைஞர்களை கடத்திச் சென்றுள்ளனர். —க-இ

## வேளாண்மை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடத்தும் 1993/94-ம் ஆண்டுக்கான வதிவிட வேளாண்மைப் போட்டி பற்றிய கலந்துரையாடல் ஒன்று நாளை 23-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு கோண்டாவிலுள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறும்.

இந்தக் கலந்துரையாடலில் சகல பிரதேசசபை செயலர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் கேட்டுக்கொண்டுள்ளார். (162-இ

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

1992 (விசேட) ஏப்ரல் பரீட்சையில் தோற்றி பாதிப்படைந்த மாணவர்களுக்கான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை மாலை யாழ் இந்துக்கல்லூரியில் 3-30 மணிக்கு நடைபெறவுள்ளது. பாதிப்புற்ற அனைத்து மாணவர்களையும் இக் கூட்டத்தில் ஒன்றுகூடுமாறு பாதிக்கப்பட்ட மாணவர் ஒன்றியம் கேட்டுக்கொள்கிறது.

## அரச சேவை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவை உபகுழு ஒன்றினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனையைத் தொடர்ந்து 1990ம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து இவ்விகிதாசார அடிப்படையிலும் திறமை அடிப்படையிலுமே ஊழியர்களின் நியமனங்கள், பதவி உயர்வுகள் வழங்கப்பட்டு வந்தன.

அண்மையில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பொன்றினை அடுத்தே இனிமேல் இந்த நடைமுறையை மாற்றுவதென முடிவுசெய்யப்பட்டது.

அரசியல் மற்றும் பொது விவகாரம் சம்பந்தமாக அமைச்சரவை உபகுழுவினால் சிபார்சுசெய்யப்பட்டு அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள புதிய ஏற்பாட்டின்படி சேவைமூப்பு, திறமை என்பனவற்றின் அடிப்படையிலேலே இனிமேல் பதவி உயர்வு மற்றும் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. (ஈ-க-இ)

## கிழக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஞானந்தன் ஜீவானந்தன் திருமலை), வீரவேங்கை அருளையன் அல்லது செல்லப்பா (உதயராசா திருமலை , வீரவேங்கை தவசீலன் (நாகராசா பாலகிருஷ்ணன் மூதூர்), 2ம் லெப் பன்னீர் (கந்தசாமி கோபால்) ஆகிய நால்வருமே வீரச்சாவை தழுவிக்கொண்ட வீரர்களாவர்.

இதேவேளை திருமலையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற தேடுதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர்.

லெப் நடேஸ் (ராசதுரை ஜெயரத்னம் தம்பலகாமம்), 2ம் லெப். செல்வன் (ஆறுமுகம் ஐயம்பிள்ளை சீராளிங்கம் திருமலை ஆகிய இரு போராளிகளுமே வீரச்சாவடைந்தவர்களாவர். (ஈ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10 336/B: